JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw- 7- Witness
for Prosecution

CC.No. 98/2024 Crime No. 59/2024 Station Appakoodal

| | | | |
|---|---|---|---|
| Name | PW. 7 திரு சின்னச்சாமி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 17.06.2026 | | | |

**1ம் மற்றும் 2ம் எதிரி ஆஜர். 3ம் எதிரி வேறு ஒரு வழக்கில் சிறையில் உள்ளார். 3ம் எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று, தற்பொழுது சத்தியமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உதவியாளர் பணியில் இருந்த பொழுது, கடந்த 02.03.2024–ம் தேதியன்று 13.00 மணிக்கு நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திருநாவுக்கரசு என்பவர் நிலைய அலுவலகத்தில் இருந்த பொழுது BSNL நிறுவனத்தின் வட்ட பொறியாளர் பழனிச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரிணை பெற்று நிலைய குற்ற எண் 59/2024, சட்டப்பிரிவுகள் 380 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சம்பவ இட சாட்சிகளான குமாரசாமி மற்றும் வெங்கடேஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் பழனிச்சாமி, கோவிந்தசாமி, ஜெகதீஸ்வரன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் சம்பவம் நடந்தது உண்மையென தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 02.03.2024 ஆம் தேதியன்று தளவாய்பேட்டை, நால்ரோடு அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது, பவானி மெயின் ரோட்டில் மூன்று நபர்கள் கையில் இரண்டு பைப்புகளை எடுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்களை விசாரித்த போது இரண்டு நபர்கள் தப்பி ஓடி விட்டார்கள். இந்த வழக்கின் எதிரி தமிழ்ச்செல்வன் என்பவர் மட்டும் மாட்டிக் கொண்டார். அவரை அன்றைய தினம் 3 ½ மணிக்கு கைது செய்தும், அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் குமாரசாமி மற்றும் வெங்கடேஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு என்னை அழைத்துக்கொண்டு சென்றால், நான் மறைத்து வைத்திருக்கும் இடத்திற்கு கூட்டி**

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.17 16:01:51 +0530

**சென்று நாம் அடையாளம் காட்ட, வாழ்வுகளுடன் கூடிய இரும்பு பைப்புகள் மற்றும் இரும்பு கதவுகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்பது மட்டும் அ.த.சா.ஆ.9 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் அழைத்துச் சென்ற ஓரிச்சேரி புதூர், இந்திரா நகர் எதிரில் உள்ள மழை நீர் குட்டை அருகில் உள்ள செடி புதரில் மறைத்து வைத்திருந்த கேட்புகளுடன் கூடிய இரும்பு பைப்புகளுடன் கூடிய வாழ்வுகள் இல்லாத L வடிவ மற்றும் நீளமான துண்டு இரண்டு, துண்டு இரும்பு பைப்புகள் சுமார் 90 கிலோ எடை உடையதும் மற்றும் இரண்டு இரும்பு கதவுகளை எதிரி தமிழ்ச்செல்வன் எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் 16.30 மணிக்கு நான் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன்.

பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்குச் சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து தக்க வழி காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.த.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் குமாரசாமி, வெங்கடேஸ்வரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மற்ற இரண்டு எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 04.03.2024 ஆம் தேதியன்று ஓரிச்சேரி பேருந்து நிறுத்தம் அருகில் நின்று கொண்டிருந்த எதிரி விஜய் என்பவரை தகவலாளி அடையாளம் காட்ட போலீஸ் பார்ட்டியை பார்த்ததும் தப்பிச் செல்ல முயன்றவரை பிடித்து விசாரித்தபோது, முன்னுக்குப் பின் முரணாக கூறியவர் பின்னர் தனது பெயர் விஜய் என்கிற நடராஜ் என்றும், தனது முகவரியையும் கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அவருக்கு U/S. 41(A) Cr.P.C கீழ் காலை 09:30 மணிக்கு அறிவிப்பு சார்பு செய்தும், பின்னர் எதிரியை கைது செய்வதற்கான காரணம் கூறி காலை 10.00 மணிக்கு கைது செய்தும், அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கிருந்த சாட்சிகளான சம்பத் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோர்கள் முன்னிலையில் அன்றைய தினம் காலை 10.15 மணிக்கு பதிவு செய்தோம். காலை 11.00 மணிக்கு அவரை நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழி காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் சாட்சிகள் பாலசுப்பிரமணியம் மற்றும் சம்பத் ஆகிய அவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.04.2024 ஆம் தேதியன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவியாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் மூன்றாம் எதிரியான முருகானந்தத்தை தேடி வந்தோம். அவர் கிடைக்கவில்லை. அதனால் அவரை தலைமறைவு எதிரி எனக் குறிப்பிட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 15.04.2024 ஆம் தேதியன்று எதிரிகள் மூவர் மீதும் சட்டப்பிரிவுகள் 380 IPC கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி பதிவுகள் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 1ம் எதிரி கைது செய்ததாக சொல்லப்படும் தளவாய்பேட்டை பேருந்து நிறுத்தம் அருகிலும், சிசிடிவி கேமரா பதிவுகள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி பதிவுகள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இரண்டாம் எதிரி கைது செய்ததாக சொல்லப்படும் ஓரிச்சேரி பேருந்து நிறுத்தத்திலும் சிசிடி பதிவுகள் உள்ளது என்றால், சரியல்ல.

நான் சொல்வது தவறு என்றாலும், அந்த இடத்தில் சிசிடிவி பதிவுகள் உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக தற்போது இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 16:01:56 +0530

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், புகார் எதுவும் நான் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. ஆஜர் எதிரிகள் என்னிடம் எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், சரியல்ல. நான் முறையாக இந்த புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.17 16:02:00 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**